## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்

**C.C.No. 47/ 2017**

2019ம் ஆண்டு ஜூலை மாதம் 25-ம் நாள் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சி 1 - (PW1) ஆக கூட்டுறவு சங்க துணை பதிவாளர் திரு.முருகன் என்பவரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.த.சிவக்கொழுந்து, மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. முருகன் | வயது | : |
| த/பெ.(அ) க/பெ | : | | தொழில் | : |
| ஊர் | : | | சமயம் | : |
| வட்டம் | : | | ஜாதி | : |
| மாவட்டம் | : | | | : |

**25.07.2019**

**முதல் விசாரணை**

நான் தற்போது கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளராக தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை நிலையத்தில் மேலாண்மை இயக்குநர் நிலையில் பணிபுரிந்து வருகிறேன். நான் 01.12.2004 அரியலூர் சரக துணை பதிவாளராக இருந்தபோது அணைக்குடம் தொடக்கவேளாண்மை கூட்டுறவு வங்கியில் வழங்கிய பயிர் கடன்களை பரிசீலனை செய்ததில் முறைகேடு நடைபெற்றதை தொடர்ந்து செயல்முறை ஆணை எண்.ந.த.4449/2004 (வே.சே.ச)வேளாண்மை சேவை சங்கம் 30.11.2004 ல் தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டப்பரிவு 81-ன் கீழ் அணையிடப்பட்டு கூட்டுறவு சார் பதிவாளர் திரு.ராஜா சாமிநாதன் விசாரணை அதிகாரியாக நியமிக்கபட்டார். இவர் 18.12.2004- ல் விசாரணைரயை தொடங்கி 21.02.2005 அறிக்கை சமர்பித்தார். அந்த அறிக்கையில் வங்கி எண் உறுப்பினர் திரு.வெங்கடாச்சலம் அவர்களுக்கே கடன் ரூபாய் 9,000/- வழங்கியதில் 320/- ரூபாய் ரொக்கமாக வழங்கிவிட்டு மீதம் 6600/- ரூபாயை வங்கி செயலாளர் கந்தவேல் முறைகேடு கையாடல் செய்துவிட்டார். இதற்கு வங்கியின் தலைவர் காசிராஜனும் உடந்தை ஆவார். வங்கி உறுப்பினர் ரங்கநாதன் 6830/- ரூபாய் கடன் வழங்கியதில் 230 உரபகுதிக்கு ரொக்கமாக வழங்கிவிட்டு ரூபாய் 6600/-யை வங்கியின் எழுத்தர் சீனிவாசன் கையாடல் செய்துவிட்டார். இதற்கு வங்கியின் தலைவர் காசிராஜன் ரொக்க புத்தகத்தை எழுதிய ராமலிங்கம் எழுத்தர் மற்றும் ரொக்க புத்தகத்தில் கையெழுத்து இட்ட கந்தவேல் ஆகியோர் பொறுப்பாவார். வங்கியின் உறுப்பினர் குருசாமி ரூபாய் 5710/- கடன் வாங்கியதில் 838/- ரூபாய் ரொக்கமாக வழங்கிவிட்டு 4872/- ரூபாய் சீனிவாசன் கையால் செய்துவிட்டார். இதற்கு தலைவர் காசிராஜன் எழுத்தர் ராமலிங்கம் செயளர் பொறுப்பு கந்தவேல் உடைந்தை ஆவார். வங்கி உறுப்பினர் கலியமூர்த்தி ரூபாய் 11,970/- கடன் வழங்கியதில் ரூபாய் 370/- உரபகுதிக்கும் 100/- ரூபாய் பூச்சி மருந்துக்கும் ரொக்கமாக வழங்கிவிட்டு எழுத்தர் சீனிவாசன் மீதி தொகை 11,500/- யை கையாடல் செய்துவிட்டார்.

இதற்கு வங்கியின் தலைவர் காசிராஜன் எழுத்தர் ராமலிங்கம் மற்றும் செயளார்

பொறுப்பு கந்தவேல் உடைந்தை ஆவார், மொத்த கையாடல் தொகை 31,977/- ஆகும். நான் இது குறித்து 30.06.2005 பெரம்பலூர் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரிடம் புகார் அளித்தேன். அந்த புகார் மனு அ.த.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

இல்லை.